காஞ்சி

ஆசிரியர்
அண்ணாதுரை

17-4-66

விலை 20 காசு



சென்னை
வெலிங்டன் • பிரபாத் • சரஸ்வதி
மற்றும் தென்னாடெங்கும்
பி.எஸ்.வி.
பிக்சர்ஸ்
யார் நீ?
திரைக்கதை, வசனம் • பாடல்கள்
M.K.ராமு • கண்ணதாசன்
இசை கேமிரா கலை
வேதா • W.R.சுப்பாராவ் • A.K.பொன்னுசாமி •
எடிட்டிங் ஸ்டில்ஸ் ஸ்டுடியோ
S.A.முருகேஷ் • C.பத்மனாபன் • பரணி
SEMBI
டைரக்ஷன் • சத்யம்
தயாரிப்பு P.S.வீரப்பா

கோட்டாகுடி பெரியநாயக்கர்
அ. கோவிந்தசாமி அவர்களின்
நூல் தொகுப்பு

சம்மதம் தேவை!

ஆளப்பட வேண்டிய மனிதனின் சம்மதம் பெருமல் ஆளு கின்ற மனிதன் நன்மை விளைவிப்பவன் அல்லன்!

—ஆபிரகாம்லிங்கன்

காஞ்சி

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாத சந்தா ரூ. 5

மலர் 2 17—4—66 இதழ் 38

சட்ட உதவி!

காங்கிரஸ் கட்சி, இந்தியத் துணைக் கண்டத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு 19 ஆண்டுகள் ஆகின்றன.

இந்தப் பத்தொன்பது ஆண்டுக் காலத்தில், இந் நாட்டு ஏழை மக்களுக்காக அக்கட்சி அளித்த வாக் குறுதிகளில் பெரும்பான்மையும் நினைத்துப் பார்க்க வேண்டிய அளவிலேயே இருக்கின்றனவே தவிர, செயல்பூர்வமாக ஏதேனும் இருக்கின்றதா? என்பவை ஐயப்பாட்டுக் குரியவைதான்!

சுதந்திரப் போராட்டக் காலத்திலேயே, 'இந்த நாட்டின் ஏழை மக்களுக்குச் சரியான நீதி கிடைக்க வில்லை; அந்த நீதி கிடைக்க அரசே பொறுப்பேற்றல் நல்லது' என்ற கருத்து நிலவியது. பலர் வெளிப்படை யாகவும் இதுபற்றிக் கூறியுள்ளனர். அந்நிய ஆட்சி யில் இந்த 'நீதி'யை எதிர்பார்க்க முடியாது—என்ப தால் பிரச்னை அதுபோது வலியுறுத்தப்படவில்லை.

சுதந்திரத்திற்குப் பின், மரண தண்டனை ஒழிக்கப் படவேண்டும் என்ற ஒரு கருத்து, கடந்த பத்துப் பதி னைந்து ஆண்டுகளாகவே பரிசீலனையில் இருந்து கொண்டிருப்பது போலவே, 'ஏழை மக்களுக்கு சட்ட உதவி அளிக்கும் பொறுப்பை அரசினரே ஏற்றுக் கொள் வது' என்ற கருத்தும் ஆட்சியாளரின்யோசனையில் பல் லாண்டுக் காலமாகவே இருந்து வந்திருக்கிறது.

அண்மையில், சென்னை வக்கீல்கள் சங்கத்தில் பேசிய மத்திய சட்ட அமைச்சர் சி. ஆர். பட்டாபி ராமன்,

> ஏழை மக்களது உரிமைகளை, சிறப்பாக ஜீவாதார உரிமைகளை, நீதிமன்றத்தின் மூலம் நியாயமான அளவு நிலைநாட்டிக் கொள்ள, அவர்களுக்குச் சட்ட உதவி அளிப்பது பற்றி மத்திய அரசு ஆலோசித்து வருகிறது.

—என்ற கருத்தை வெளியிட்டுள்ளார்.

அறிவிப்பு காலங் கடந்துதான் வெளியிடப்பட் டிருக்கிறது என்றாலும் வரவேற்கப்படவேண்டிய ஒன்று தான் என்று கூறி மகிழ்ச்சியடைகிறோம்.

கடந்த பல ஆண்டுகளாக, காங்கிரசார் தம் ஆட்சி யினைப் பறிபோகாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக இழைத்த அநீதிகள் பலப் பல என்ப தற்குப் பல நீதிமன்றத் தீர்ப்புக்கள் சான்று கூறு கின்றன.

இதனால் பலபேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்- வாழ்க்கை இன்பங்களையே இழந்துவிட்டிருக்கிறார்கள் --சிறைச்சாலைக்குள்ளே தள்ளப்பட்டு சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆட்சி நாற்காலி ஆட்டங்காணாதவாறு எடுக்கப் பட்ட நடவடிக்கை என்பதன்பேரால் மட்டும் இந்தக் கொடுமைகள் இழைக்கப்பட்டு, ஏழை எளிய அப் பாவி மக்கள் இடர்ப்பாட்டுக்கு ஆளாகி, நீதிகிடைக்கப் பெறாமல், மனங்குமுறிக்கிடக்கும்நிலை ஏற்பட்டுவிட வில்லை.

அதிகாரிகள் தம் பதவியைக் காப்பாற்றிக்கொள் ளவும் அநீதிகள் இழைத்திருக்கிறார்கள் என்பதும், பணத் திமிங்கிலங்களும், முதலாளிமார்களும் தங்கள் தங்கள் அந்தஸ்தையும், நிலையையும் — மதிப்பையும் கூடக் காப்பாற்றிக்கொள்வதற்காக—ஏழை எளியார் மீது நீதி நியாயமற்ற முறையில் வழக்குகள் தொடுக் கப்பட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், சொத்துரிமை, வாரிசுரிமை என்பவைகளின் பேராலும் இக்கொடுமை இந்த நாட் டில் பரவலாக இழைக்கப்பட்டு வந்திருக்கிறது.

நியாயமாகச் சேரவேண்டிய சொத்துக்களும் அதன் பயன்களும், 'கையில் காசில்லை — நீதிமன்றம் செல்ல முடியவில்லை' என்ற ஒரே ஒரு காரணத்தால், தமது உரிமைகளையும் நலன்களையும் இழந்து தவிப் போர் இந்த நாட்டில் ஏராளம்.

அதே நேரத்தில் இங்கே, வழக்குத் தொடர்பான நீதிமன்றச் செலவுகள் அதிகம் என்ற கருத்தும் பரவ லாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்நிலையில் ஏழை எளிய மக்களுக்குச் சரியான நீதியும், ஜீவாதார உரிமைகளும் எப்படிக் கிடைக்க முடியும்?

நாட்டுப் பாதுகாப்பு என்பதன் பேரால், இந்திய அரசு, முற்றிலும் தேவையற்ற பல விஷயங்களில், பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்தியதை, வசதி படைத்த சிலர் வழக்கு மன்றம் சென்று, தேவையற்ற முறையில் இச்சட்டம் பயன் படுத்தப்பட்டிருக்கிறது என்ற நீதி மன்றத் தீர்ப்புக்களைப் பெற்றிருப்பதையும் நாடு நன்கறியும்.

இதே தன்மையில் வசதியற்றவர்கள்மீது இச்சட் டம் பாய்ந்தபோது, காவல் நிலையத்தின் கம்பிகளுக் கிடையே இருந்து 'கண்ணீர்' உகுத்தோர் பலப்பலர்.

> ஏழை எளியவர்களின் சட்ட உதவிக் காக 50 சதவீதம் மானியமாக மத்திய அரசு அளிக்கும்; 20 சதவீதத்துக்குக் குறையாமல் மாநில அரசுகள் ஏற்கவேண்டும்

என்றுகூட தம் பேச்சின்போது அமைச்சர் கூறியிருக் கிறார்.

பாதிக்கப்பட்டவர்கள், நீதி பெறுவதில் உண்மை யான அக்கறை காட்டப்படவேண்டும் என்ற நல்லித யம் கொண்டோரின் நம்பிக்கையை, இந்த அறிவிப்பு

அதிகப்படுத்தும்; என்ருலும், இது தொடர்பான யோசனைகளை மேற்கொண்டிருக்கும் அமைச்சகம் முற்றிலும் வசதியற்ற ஏழை எளிய மக்களுக்கு நீதி கிடைக்கும் முழுப்பொறுப்பையும் அரசே, ஏறறுக்கொள்ள வேண்டும் என்ற அளவிலும் தனது யோசனையை அகலப்படுத்திக்கொள்ள வேண்டும்.

"70 சதவீதத்தை நாங்கள் ஏற்கும்போது 30 சதவீதத்தை 'அவர்கள்' ஏற்றுக்கொள்ளக்கூடாதா?" என்ற வாதம் மேலோட்டமாக ஏற்புடையதாகத் தோன்றினும் முற்றிலும் வசதியற்றவர்கள் என்ற தன்மையையும் அரசு ஆராயத் தவறக்கூடாது.

வழக்கம் போன்ற 'அரசு ஆராய்கிறது' என்ற அறிவிப்பாக இது இல்லாமல், 'உடனடியாக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கை' என்ற அளவில் யோசனைகளைத் தீவிரமாக்கி முடிவுகளைத் துரிதமாகச் செயல்படுத்தி, இந்த "ஒரு" நல்லகாரியத்தையாவது செய்தோம் என்ற மனத் திருப்திக்கு ஆளவந்தார் ஆளாகத் தவறமாட்டார்கள் என்று நம்புவோமாக!

தேர்தல் நெருங்குகிற இந்த வேளையில், தம் தேர்தல் பிரச்சாரத்துக்காக 'சாதித்தோம் பட்டியல்' காட்டப் போகும் காங்கிரஸ், இந்த ஒரு உண்மையான' சாதனையையாவது செய்துவிட்டு, வாக்குக் கேட்க வரவேணடும் என்பதே நம் அவா! நீதி கிடைக்காமல் வாடி வதங்கும் புல்லாயிரம் ஏழை நிரபராதிகளின் அவா!!

●

வாய்வு சூரணம்

(Stomach Powder)

மலச்சிக்கல் — மலக்கட்டு — உஷ்ண வாய்வு—பித்த வாய்வு—இடுப்ப வாய்வு—இடுப்பு; கைகால் பிடிப்பு—அசரிக்கை—செரியாமை — வயிற்றுவலி முதலான வாய்வுகளை நீக்கி நல்ல பசி எடுப்பதற்கும் திரேகாரோக்கியத்திற்கும் மிகச் சிறந்தது. (பத்தியமில்லை.)

165 கிராம் (5 பலம்) டின் ரூ. 3-50

–: தேவைக்கு எழுதவும் :–

S. V. R. கண்டர் சன்ஸ்,
வாய்வு சூரணம் டிப்போ
தம்மண்ண செட்டியார் ரோடு
அரிசிப்பாளையம், சேலம்–9.

கிடைக்குமிடங்கள்:

தேஜ்பால் & கோ,
91, நைனியப்ப நாய்க்கன் தெருவு,
சென்னை–3.

இளங்கோ கிளீனிக்
நெல்லித்தோப்பு,
வில்லியனூர் ரோடு, பாண்டிச்சேரி-5

சொக்கனுதம் செட்டியார்,
நாட்டுமருந்துக் கடை-திருப்பாபுலியூர்,
கடலூர் N. T.

ராஜா மெடிக்கல் ஹால்
31, தர்மராஜா கோவில் தெரு,
பெங்களூர்–1. (கண்ட்)

E. வல்லாராம்நாடார் & சன்ஸ்
188-A. தாராவி ரோடு,
பம்பாய்–17.

ஆத்மஜோதி நிலையம்
நாவலப்பிட்டி, (சிலோன்)

ஸ்ரீ கணபதி அண் கம்பெனி
66, பெல்பீல்டு ஸ்டிரீட்,
ஈப்போ P.O. (மலேசியா)

வெள்ளை மாளிகையில்...... (10)

மனிதன், மிருகமல்ல!

இன்ப வாழ்க்கைக்கான அழைப்பு ஒருபுறத்திலிருந்து. செல்வம்! செல்வாக்கு! மாளிகை! மலர்த்தோட்டம்! துணைவியாரின் மனம் மகிழ்ச்சியால் துள்ளிடும் நிலை! குடும்பத்துககு நிமமதி! இவையாவும எதிரே நிற்கின்றன!

எங்கோ நெடுந்தொலைவிலிருந்து ஒரு பெருமூச்சு ஒலி கிளம்புகிறது! வழக்கறிஞர் நாட் ஆபிரகாம்ஸ் செவியிலே அந்தப் பெருமூச்சு புகுந்ததும், இன்ப வாழ்க்கைக்கான அழைபபை அவர் உதறித்தள்ளுகிறார்.

வழககறிஞர் திறமையைக் காட்டி வெற்றி பெற்றிடுவதை மட்டுமே கடமையாகக் கொள்ளவேண்டும் எனற ஒப்புக்கொள்ளப்பட்ட ‘மரபு’, மனிதத்தன்மையை மாய்த்திடும் நிலைக்கு அந்த வழக்கறிஞரை இழுத்துச் செல்லுமானால், அந்த ‘மரபு’ மாண்பானதாக முடியாது.

வழக்கறிஞரின் திறமை எதற்குப் பயன்படுதல் வேண்டும? எதிர்தரப்பினர் எந்த இடத்திலே இடறுவார், எநதக் குறிப்பிலே குழம்புவார், எந்தக் கட்டததிலே குளறுவார், எந்த வாததமதை மறந்திடுவார், எந்த சட்ட நுணுக்கத்தை வலியுறுததத் தவறிவிடுவார் என்று கூர்மையாகக் கவனிததுககொண்டிருந்து, தக்க சமயமாகப் பார்த்து பாய்ந்து தாககி வீழத்துவது மட்டுந்தானா!

நாட் அவ்விதம் எண்ணவில்லை. வழக்கறிஞர், நீதிக்காகப் பரிந்து பேசவேண்டும்; சட்டத்தைக்கொணடு எவரேனும எவரையேனும வாட்டி வதைத்திட முனைந்தால், அவர்களைக் காத்திட முனையவேண்டும். எத்தனை சட்ட நுணுக்கங்கள், சான்றுகள், விளக்கப் பட்டபோதிலும் அவையாவும, நீதியை நிலைநாட்ட மட்டுமே பயன்படுதல வேண்டும்; அதற்கான முறையிலே வழககு நடத்தப்படுகிறதா என்பதைக் கண்டறிவதே வழககறிஞரின் தனித திறமையாக இருககவேணடும என்று நாட் கருதினார்.

குற்றவாளிக் கூண்டிலே கொண்டு வந்து நிறுததப்படுபவர், தமது நணபர் என்பதாலேயே, அவர் காப்பாறறப்பட்டாகவேணடியவா எனற கோணல் வாததமதை நாட் ஆபிரகாம் மேற்கொள்ளவில்லை.

உனது நண்பா, ஓர் மனிதா! நிறம் கருப்பு, ஆனால் நெஞ்சம் தூய்மையானது! அவர் மீது பழி சுமததபபடுகிறது என்று நம்பினா.

அவர்மீது குற்றம்சாட்டும் வெள்ளை இனத்தவர், பல நூற்றுண்டுகளாக கருப்பர் மீது பகை, வெறுப்பு கக்கிவருபவர். கருபபாகளைக கொடுமை செய்வது, அறமல்லவே முறையல்லவே எனற உணாவ்வ அறறவாகள, அவர்கள குறறம சுமத்துகிறாகள் எனறால், பகை காரணமாகததான இருககமுடியும என்று நாட் திடமாக நமபினா.

எல்லாவற்றையுமவிட, தனனை எததனை நமபிககையுடன், நட்புணாசசியுடன அழைத்தார் டில்மன் எனபதை எணணுமபோது, எதை இழப்பதாயினுமசரி, எததனை இன்னலை ஏறகவேணடி நோ்டினும்சரி, நணபன பககம நினறாக வேணடும எனற உறுதி பிறந்தது.



துணைவியாரின் பேச்சும் கண்ணீரும், தன் நெஞ்சை உருக்கிடுவதை உணர்ந்தார். பேதைப் பெண! என்னைக் கணவனுகப் பெற்றதால், சீமாட்டியாகலாம், சிங்கார வாழ்விலே புரளலாம் என்று எண்ணிக்கொண்டாள். பெருத்த ஏமாற்றம், பாவம்! எறிச்சலாகத்தான் இருக்கும. இத்தனைக் காலமாகத்தான் ஏழை எளியோர்களுக்காக வேலை செய்து, வாழ்க்கையைப் பாலையாக்கிக் கொண்டார்! இப்போது ஒரு வாய்ப்புக் கிடைக்கிறது — பெரிய வணிகக் கோட்டம் அழைக்கிறது—கேட்கும் பணம் தரச் சம்மதிக்கிறது — இதையும் உதறித தள்ளிவிடுவதா! குடும்பம் எக்கேடோ கெடட்டும் என்ரு இருப்பது! நான் வேண்டுகிறேன், கெஞ்சுகிறேன், கண்ணீர் வடிக்கிறேன்! கவலைப்படக் காணுேமே!! என்று பாபம், அவள் பதறுகிருள். என் எண்ணத்தை அவள் ஏற்க மறுக்கிருள. அவள்மீது கோபித்து என்ன பயன்? எந்த மனைவியும் தன் கணவனிடம் எதை எதிர்பார்ப்பாளோ அதைத்தான் அவள் எதிர்பார்க்கிருள! நான் தான் அவளுக்கு ஏமாற்றத்தைத் தருகிறேன். நான் வேறென்ன செய்ய முடியும...

நாட் ஆபிரகாம்ஸ் இவ்விதமாகவெல்லாம் எண்ணி எண்ணி ஏங்குகிருர். உட்கார்ந்தபடியே உறங்கிவிடுகிருர்.

வெகுண்டு வெளியே சென்ற அவர் மனைவி வருகிருள்; மெள்ளத் தன் கணவன் தோளைத் தொட்டு எழுப்புகிருள். வேறு ஏதோ ஓர் உலகு சென்று திரும்பியவன் போன்ற நிலையில் ஆபிரகாம் இருக்கக் காண்கிருள்.

தழதழத்த குரலில் அவள் பேசுகிருள்; "அன்பே! என்னை மனனிதது விடு! ஏதோ மனக குழப்பம். என்னென்னமோ பேசிவிட்டேன். கோபமாக. உங்கள் முடிவுதான் சரியானது, நியாயமானது. டக்ளஸ் டில்மனை நாம் கைவிடககூடாது. அவருக்காக வாதாட வேண்டியதுதான் கடமை..."

"என்ன சொல்லுகிருய் அன்பே! டக்ளஸ் டில்மனிடம் இத்தனைப் பரிவு எபபடி ஏற்பட்டது."

"பாவம்! அத்தனைப் பெரியமாளிகையில், தன்னந் தனியாகத்தானே டில்மன் தவிததுக்கொண்டிருப்பார்; தனக்காகப பரிந்து பேச, தனககு நியாயம் கிடைக்கும்படிச் செய்ய ஒருவரும் இல்லையே என்ற துக்கம் துளைத்திடும் நிலையில. அதை எண்ணிக்கொணடால், மனம் என்ன பாடுபடுகிறது தெரியுமா..."

"இந்த மனமாற்றம் ஏற்படக் காரணம்?"

"உண்மையை உணர்ந்ததால்; டக்ளஸ் டில்மன் எந்த நிலைமையில் இருக்கிருர்; அவரைச் சுற்றிலும் எததனைப் பகை கப்பிக கொணடிருக்கிறது என்பதை உணர்ந்ததால். அன்பே! கோபமாகச் சென்றேனல்லவா வெளியே; சிறிது தூரம் சுற்றிவிட்டு, அந்த மாளிகைக்கு எதிர்ப்புறம் நின்றேன்; வெள்ளை மாளிகைககு எதிர்ப்புறம் உளள சாலையில். அகமகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டே அவ்விடம் வந்த ஓர் ஆரணங்கையும் அவள் மணவாளனையும் கணடேன்! புது மணமக்கள் போல இருககிறது. அந்தப் பெண் அவனைக கேட்டாள், "அதோ அதுதானே வெள்ளை மாளிகை?" என்று; ஆம என்ருன அவன்; உள்ளேபோய்ப் பார்க்க வேணடும் என்று எனககு ஆசையாக இருக்கிறது என்ருள் அந்தப் பெண், அவனே ஓர் ஏளனச் சிரிப்புடன் கூறினுன்," அங்குதானே! போகலாம்; ஆனல் இப்போது வேண்டாம்; இப்போது அங்கு ஒரு கருபபன் அல்லவா இருக்கிருன்!! ஆனல் அவன் அங்கே அதிக நாட்கள் இருக்கப் போவதில்லை; வெளியே துரத்தப் போகிருர்கள், வழக்குத்தொடுத்தாகிவிட்டது; கருநிறத்தான் வெளியே சென்றதும், நாம் உள்ளே போய்ப் பார்க்கலாம், வெள்ளை மாளிகையைக் கழுவிச் சுத்தப் படுத்தி விடுவார்கள் என்ருன்; அவள் சிரித்தாள்! அன்பே! அப்போதுதான் எனக்கு டக்ளஸ் டில்மனுடைய நிலைமை புரிந்தது. சட்டப்படி குடிஅரசுத் தலைவராக அமர்ந்திருக்கிருர். ஆனல் நிறவெறி காரணமாக அவரை அவ்வளவு வெறுக்கிருர்கள் கேவலமாகப் பேசுகிருர்கள்; ஒழித்துக் கட்டவே முனைகிருர்கள். அவ்வளவையும் தாங்கிக் கொண்டல்லவா அவர் தத்தளிககிருர். நீதி அறிந்தவர்கள் அவர் பக்கமல்லவா நிற்கவேண்டும்! அதனை உணர்ந்தேன், ஓடோடி வந்தேன்; என்ன தவருன காரியம் செய்துவிட்டேன் என்பதை எண்ணியபடி. அன்பே! உடனே குடிஅரசுத் தலைவரிடம் கூறிவிடு, வழக்கு மன்றம் வரத் தயார் என்று; நீதிக்காக வாதாடத் தயார் என்று."

"அன்பே! உன் மனம் மாறும் என்பதை நான் அறிவேன். அதனை எதிர்பார்த்து, நான் ஏற்கனவே குடிஅரசுத் தலைவருக்குத் தொலைபேசி மூலம் தெரிவித்துவிட்டேன், அவர் சார்பில் வழக்கை நடத்துவதாக!"

தம்பி! இதுபோல இருவரும் உரையாடி மகிழ்கின்றனர். குடும்பம் நிம்மதியாக வாழ்ந்திட வேணடுமே

தமிழ் நாட்டில் தனிச் சிறப்புடன் விளங்குவது

ஜெயா பார்மஸி

ஆயுர்வேத வைத்தியசாலை

H. O. பெரியகுளம்

எங்களது பார்மஸியில் உற்பத்தியாகும்

ஆஸவங்களும் அரிஷ்டங்களும்

விற்பனை செய்ய ஏஜெண்டுகள் தேவை.
போதுமான கமிஷன் கொடுக்கப்படும்.

N. B:— எங்கள் பார்மஸி சர்க்காரால் **(Recognised by Central Board of Indigenous Madicine Madras.)** அங்கீகரிக்கப்பட்டது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிரேம்.

திண்டுக்கல் பிராஞ்சில் தொடர்புகொளக:
உரிமையாளர்: **J. M.** ராஜன்
ஜெயா பார்மஸி
6, நேருஜிநகர், மதுரைரோடு, திண்டுக்கல்.
PHONE: 348, 348-A, 438

என்ற இயற்கையான, தேவையான, நியாயமான எண்ணத்தின் காரணமாக சிறிதளவு மாசு மனதிலே புகுந்தது; எனினும் மீண்டும் தூய்மைப்பட்டு விட்டது.

அப்போது அந்த மாது கூறுவதாக நூலாசிரியர் ஓர் கருத்தைத் தருகிறர்; அது என் மனதை வெகுவாக நெகிழச் செய்தது.

பெரிய வணிகக் கோட்டத்தின் வழக்கறிஞரானல், பணம் ஏராளமாகக் கிடைக்கும்; சில ஆண்டுகளுக்குப் பிறகு, சிற்றூரில் ஓர் சிங்கார இல்லம், சாலையும் சோலையும சூழ்ந்த இடத்தில் ஒரு பண்ணை! அமைத்திடலாம்; அங்கு நிம்மதியாகக்குதூகலமாகவாழ்ந்திடலாம்; குழந்தைகளுக்கு அந்த எழிலகத்தைத் தந்திடலாம் என்றல்லவா ஆசைப்பட்டாள் வழக்கறிஞரின் மனைவி; அதை மீண்டும் நினைவுபடுத்திவிட்டுச் சொல்கிருள், நாம் நினைத்தபடி சிற்றூரில் எழிலகம்! சாலையும் சோலையும் அமைந்த ஒரு பண்ணை இவைகளை நமது குழந்தைகளுக்கு நாம் பெற்றளிக்க முடியாது, ஆனல் அன்பே! நீதிக்கு இடமளிக்கும் நாட்டை ஒப்படைத்துவிட்டுச் செல்லும் பாக்கியம் கிடைக்குமல்லவா! அது போதும்! அது பண்ணையைவிட எவ்வளவோ மேலானது.''

இருப்புப் பெட்டியிலே எண்பது இலட்சம்! கரும்புத் தோட்டத்திலே வருட வருமானம் பல இலட்சம்! ஆலை! சோலை! சாலை! ஆள் அம்பு! கோட்டம்! மாடம்! கூடம்!—எல்லாம் தன் பிள்ளைகளுக்குத் தரவேண்டும்! எத்தனைப் பாடுபட்டாகிலும் அந்தச் செல்வநிலையைப் பெறவேண்டும். பிறகு!

அந்த மாளிகையிலே மந்தகாசம்!

மலர்த் தோட்டத்திலே காதல்கீதம்!

ஊரிலே பெருமதிப்பு! செல்வாக்கு! உயர்நிலை!!

பிள்ளைகள்—பேரப்பிள்ளைகள்—வழிவழி வந்தோர் மகிழ்ச்சிப் பொங்கிடும் நிலையில் வாழ்ந்திடுவர்!

என்முன்னேர் எனக்காக இத்தனை செல்வத்தைச் சம்பாதித்துவைத்தார் என்று பேசுவர்; போற்றுவர்; வழிபடக்கூடச் செய்வர்.

ஆனல், ஒரு தந்தை தன் மகனுக்கு இத்தகைய செல்வத்தை மட்டும் சேர்த்துவைத்துவிட்டால் போதுமா!

செல்வத்தைக் குவித்துவைத்துக்கொள்வதாலே மட்டுமே இன்ப வாழ்வு கிடைத்துவிடுமா?

பொருமை! வஞ்சகம்! பொல்லாங்கு! பகை! சூது! சூழ்ச்சி! மாச்சரியம்!—இவை நெளியும் நிலையில் நாடு இருந்திடின், அந்த நாட்டிலே மாளிகை உண்டு மந்தகாச வாழ்வு உண்டு என்று கூறி இருந்திட முடியுமா!

நீதி! நேர்மை! பண்பு! அறம்! அறிவு!இவைகளற்ற நிலையில் ஒருநாடு இருந்திடின்...அங்கு கோடி கோடியாகப் பணம் குவிந்திருந்திடினும், வாழ்விலே ஒரு நிம்மதி கிடைத்திடுமா!

நல்ல நாடு! என்பதைக்காட்டிலும் மேலான செல்வம், நிலையான செல்வம் வேறு எதுவும் இல்லை.

நல்ல நாடு! ஒருவரை ஒருவர் தாழ்த்திடும் இழித்தன்மை இல்லாதநாடு! நிறம், மதம், மொழி, குலம், எனும் எதன் காரணமாகவும் பேதமும் பிளவும் ஏற்படாமல், எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஓர் நிறை என்ற முறை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இடமே நல்லநாடு!

தெளிவு காட்டுவீர்!

தேர்தல் ஜன்னி காம ராசர்
தனக்கு வந்தது;
நேர்மை நீதி எதையும் அந்த
நெஞ்சி ழந்தது;

வார்த்தை ஜால நேர்த்தி காட்ட
வாய் மலர்ந்தது;
சோர்தல் இன்றிப் பொய் பரப்பும்
தொழில் நடந்தது!

"இராணு வத்தின் ஆட்சி நேரும்
இருங்கள்" என்ற சொல்
தராத ரத்தில் பாக். அயூப்பின்
தன்மை காட்டினர்;

வராத 'ஓட்டு'ம் வந்து சேர
வேண்டும் என்கிற
நிராசை கொண்ட தனது நெஞ்ச
நிலை உணர்த்தினர்!

அவலை எண்ணி உரல் இடிக்கும்
அனுப வஸ்தரின்
"கவலை இல்லை" என்ற பேச்சின்
கருத்தை நோக்குவீர்!

திவலை பொங்கும் கண்ணில் வீரம்
தேங்க வேண்டுமா?
தவறி டாமல் தேர்தல் நாளில்
தெளிவு காட்டுவீர்!

—பட்டுக்கோட்டை. இராசேந்திரன்.

என் மக்கள் வாழ்வதற்காக அத்தகைய நல்ல நாடாக இந்நாட்டை ஆக்கிட உழைப்பேன்; இதனைக் காட்டிலும் நான் என் பிள்ளைகளுக்குச் செய்யக்கூடிய நன்மை—தரக்கூடிய செல்வம் — விட்டுச் செல்லக் கூடிய வரலாறு—வேறு என்ன இருக்கமுடியும்.

செல்வம் சேர்த்துக்கொடுத்திடலாம் — எதற்கு அது பயன்படவேண்டும்? நிறவெறி தலைக்கேறி ஆட்ட மாடுகிறர்களே அதற்காகவா! ஆளப்பிறந்த இனம், அடிமைகளை அடக்கித் திரியும் இனம் என்ற செருக்கை மூட்டிவிடவா செல்வம்!!

பூங்கொடியாளிடம் ஓர் பேழை! பேழை நிறைய வைரக் கற்கள்!! ஆனல் அவள் இருக்கும் இடமோ, வழிப் பறிக்காரர் தங்கும் குகை!!

படுத்துத் தூங்க மலர்தூவப்பட்ட படுக்கை!! ஆனல் எந்த இடத்தில! பாம்புப் புற்றின் பக்கத்தில்!!

இவ்விதமல்லவா இருந்திடும் நமது மக்களுக்குச் சுகமளித்திடும் என்ற நம்பிக்கையில் சொத்து மட்டும் சேர்த்துக்கொடுத்துவிட்டு, நாட்டை நயவஞ்சகர் கொட்டமடிக்கும் காடாக இருக்கவிட்டுவிட்டால்!

தம்பி! இதுபோலப் பலப்பல எண்ணிடத் தோன்றுகிறது, அந்த மாது கூறிய,

இந்தவாரம் இந்த நாட்டில்...

பெங்களூர், ஏப். 8— குடிதண்ணீருக்குப் புதிதாகப் போட்ட வரியை எதிர்த்து நடத்திய ஊர்வலத்தினரில் 64 பேர், கைதுசெய்யப்பட்டார்கள்.

புதுடில்லி, ஏப். 9— மீண்டும் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு தருவதுபற்றி மத்திய அரசு யோசிக்கும் என்று நிதியமைச்சர் சௌத்ரி கூறினார்.

லூதியானா, ஏப். 9— வரும் பொதுத் தேர்தலில், பிரிந்து செல்லும் உரிமைமீது, தான் போட்டியிடப் போவதாக அகாலி தலைவர் தாராசிங் கூறியுள்ளார்.

சென்னை, ஏப். 10—நாட்டின் அந்நியச் செலாவணி நெருக்கடிக்கு, இந்திய அரசு, அதனைக் கையாளும் முறைதான் காரணம் என்று திட்டக் கமிஷன் உறுப்பினர் பார்வே, அமைச்சர் வெங்கட்ராமன், தொழில் ஆராய்ச்சிக் கவுன்சில் தலைவர் டாக்டர் உசைன் அலி ஆகியோர் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

புவனேசுவரம், ஏப். 10— வரட்சியினால், பற்றுக் குறையாயுள்ள பகுதிகளின் நிலைமையைச் சமாளிக்க மத்திய அரசு, உடனடியாக உதவி செய்யாவிடில், தன் பதவியை ராஜினாமா செய்துவிடப் போவதாக ஒரிசா முதலமைச்சர் அறிவித்தார்.

புதுடில்லி, ஏப். 10—சேலம் உருக்காலை அமைப்பது தொடர்பாக ஜப்பான் ஆலோசனைக் கழகத்தின் அறிக்கை மத்திய அமைச்சகத்திற்குக் கிடைத்துவிட்டதென அறிவிக்கப்பட்டுள்ளது

புதுடில்லி, ஏப். 10—உணவுத் துறையில் இந்தியா தன்னிறைவு பெறவில்லை பெனால், அடுத்த சில ஆண்டுகளில் இந்தியா தன் சுதந்திரத்தை இழக்கவேண்டியிருப்பதுடன், எதிர்காலமே இல்லாதுபோய்விடும் என்று பிரதமர் இந்திரா காந்தியே அறிவித்துள்ளார்.

வேலூர், ஏப். 11—மாணவர்களிடையே, ஒழுங்கும், ஒழுக்கமும் நிலவும்படியாக உடனடியாக ஏற்பாடுகள் செய்வது அவசியம் என்றார் மாணிக்கவேலு.

புதுடில்லி, ஏப். 12—மைசூரின் சிறிய கார் உற்பத்தித் திட்டத்துக்கு, டில்லியின் அனுமதி கிடைக்காதது வருந்தத்தக்கது; துரதிருஷ்டவசமானது என்றார் நிஜலிங்கப்பா.

புதுடில்லி, ஏப். 12— டி. டி. கே. மீதான கோர்ட் அவமதிப்பு வழக்கை, அனுமதிக்க முடியாதென சுப்ரீம் கோர்ட் தள்ளுபடி செய்துவிட்டது.

சென்னை, ஏப். 12—சீன அபாயம், பாக். அபாயம் என இரு முனைகளில் அபாயத்தை எதிர்நோக்காமல், இந்தியா, பாகிஸ்தான் தகராறை உடனடியாகத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று கே. சந்தானம் கூறியுள்ளார்.

பச்மாரி, ஏப். 13—1967 பிப். 19 - முதல் 26-க் குள்வாக உள்ளிட்ட நாட்களில் பொதுத்தேர்தல்கள் நடத்தப்பட்டுவிடும் என்று தேர்தல் அதிகாரி அறிவித்துள்ளார்.

நமது மக்கள் வாழ ஒரு நல்லநாடு இடைத்
திடச் செய்வோம்,

என்ற அருமைமிகு கருத்து.

நாம் வாழும் நாட்டில் நாம் காணும் கொடுமைகளில், அநீதிகளில், ஒரு சிறு அளவினையாகிலும் நாம் நமது அறிவாற்றலால், உழைப்பால், தன்னல மறுப்பால், போக்கிடுவதுதான் நாம் முதல் கடமையாகக் கொண்டிடுவது என்றநெறி, நடைமுறையாகிடுமானால், தம்பி! உலகு புன்னகைப் பூங்காவாக அல்லவா வடிவம்கொள்ளும்.

ஆனால் மிகப் பெரும்பாலோரின் எண்ணம், தன் வீடு, தன் குடும்பம், தன் மக்கள், அவர்களின் எதிர்காலம் என்ற அளவோடு அல்லவா நின்றுவிடுகிறது.

தன் பிள்ளைகளின் எதிர்காலம் இன்பமுள்ளதாக இருந்திடவேண்டும் என்று எண்ணிக்கொண்டு, காலமெல்லாம் அதற்காகவே கடுமையாக உழைத்துவிட்டு, நிம்மதியான வாழ்வையே கெடுத்திடத்தக்க அக்ரமபுரியாக நாடு இருந்திடுவதை மாற்றி அமைக்காவிட்டால் என்ன பயன்.

ஒரு தலைமுறை மற்றோர் தலைமுறைக்காக, தனித் தனி இல்லங்கள், செல்வம் என்ற இன்றைய முறையைக் காட்டிலும், ஒரு தலைமுறை தன் காலத்தில் காணப்படும் கேட்டினைக் களைந்தெறிந்து தன் நாட்டைதான் காண்பதைக் காட்டிலும் சிறிதளவேனும் நல்ல நாடு ஆக்கி அளித்துவிட்டுச் சென்றிடவேண்டும் என்ற முறை எத்துணை நேர்த்தியானது.

பலப் பல எண்ணம் என் மனதிலே மலர்ந்தன தம்பி! அந்த வழக்கறிஞரின் மனைவி கூறிய கருத்தைக் கேட்டு.

தான் மேற்கொள்ளும் காரியத்தைத் தன் துணைவியும் வரவேற்று ஆதரிக்கிறாள் என்பதைத் தந்திடும் மகிழ்ச்சியையும் எழுச்சியையும் மிஞ்சக் கூடிய சுவை வேறு எதுவும் இருக்க முடியாதல்லவா!

என்னமோ போக்கு! வீட்டைக் கவனிக்
காமல் குடும்பத்தைக் கெடுத்துக்கொண்டு
ஊருக்கு உழைக்கிறாராம் ஊருக்கு!!

என்ற சலிப்பும் வேதனையும் நிரம்பிய பேச்சைத் தாங்கிக் கொண்டபடி பொதுத் தொண்டாற்றுவது காதுக்குள் ஓர் வண்டு புகுந்து கொட்டிக் கொண்டிருக்கும் நிலையில், வாட்போரில் ஈடுபட்டு வெற்றிபெற முனைவதற்கு ஒப்பானதாகும்.

ஆனால் தமது கழகத் தோழர்களிலே மிகப் பலர், அத்தகைய பேச்சையும் தாங்கிக்கொண்டுதான் தொண்டாற்றுகிறார்கள்.

அவர்களின் தொண்டு மிகச் சிறந்தது என்ற நோர்த்திக்கு உரியதாவதன் காரணமே அதுதான். மாலை நேரப் பூப் பந்தாட்டம்! அல்ல, பொதுத் தொண்டு.

வழக்கறிஞர் ஆபிரகாம்ஸ் தன் துணைவியின் எண்ணம் தூய்மைப்பட்டுவிட்டதனால், புதிய எழுச்சி பெற்றிருக்கவேண்டும்—நிச்சயமாக.

வழக்கு மன்றத்திலே அவர் அதே எழுச்சியுடன் பேசுகிறார்.

வாதத் திறமையால் குற்றச்சாட்டுகளை உடைத்தெறிவது, குறுக்குக் கேள்விகளால் சான்றுகளைப்

பிளந்தெறிவது, சட்ட நுணுக்க விளக்கத்தால் வழக்கின் அடித்தளத்தைப் பெயர்த்திடுவது என்ற இவைகளிலே சுவை உண்டு; இந்த சுவை கிடைத்திடத் தக்க வழக்குப்பற்றிய ஏடுகள் பல படித்திருக்கிறேன். இந்த ஏட்டிலே என் மனதை மிகவும் ஈர்த்த பகுதி, வழக்கறிஞர் தமது திறமையை விளக்கிய பகுதி அல்ல; இதயத்தைத் தொட்டிடும் பகுதியே.

தம்பி! டக்ளஸ் டில்மன்மீது நான்கு குற்றச் சாட்டுகள், அவைகளில் ஒன்று கூட இறுதியில் மெய்ப்பிக்கப்படவில்லை; ஆதாரமற்றவை என்பதால்; இட்டுக் கட்டப்பட்டவை என்பதால்.

அந்தக் குற்றச் சாட்டுகளை உடைத்தெறிவதிலே அல்ல, வழக்கறிஞர் என் மனதைக் கவர்ந்தது.

நான்கு குற்றச் சாட்டுகளை வெறியர் டில்மன் மீது சுமத்தினர்; இவரோ, ஐந்தாவது குற்றச் சாட்டு ஒன்றைச் சேர்த்துக் கொண்டார்.

ஐந்தாவது குற்றம்—பட்டியலிலே சேர்க்கப் படாதது — வெளிப்படையாக எடுத்துச் சொல்லப் படாதது—ஆனால் மற்ற நான்கு குற்றச் சாட்டுகளுக்கும் அடிப்படையாக அமைந்திருப்பது — அதுதான் அவர் ஓர் நீக்ரோ என்ற குற்றச் சாட்டு!—என்று வழக்கறிஞர் ஆப்பிரகாம்ஸ் எடுத்து விளக்குகிறார்; ஆனால் மனதிலே நியாய உணர்ச்சிக்கு இடமளித்திடுவோர் அனைவரும் உருகிடும் நிலைபெறுகின்றனர்.

குற்றம் சாட்டுகிறார்கள்!

யார்? யார்மீது?

வெள்ளையர்! கருப்பர் மீது!

ஏன் குற்றம் சாட்டுகிறார்கள்?

கருப்பன் அரசாள்வதா என்பதால்!

குடிவெறி! காமச் சேட்டை! திறமைக் குறைவு கற்பழிக்க முயற்சித்தது! மகனுக்கு உடந்தையாக இருந்தது! வெள்ளை இனம் என்று ஏய்த்துத் திரியும் மகளுக்குத் தந்தையாக இருப்பது!—இவை குற்றச் சாட்டுகள்.

இவைகள் எப்போது கிளம்புகின்றன? எப்போது கிளப்பப்படுகின்றன? வெள்ளையரின் தலையாட்டிப் பொம்மையாக டில்மன் இருக்க மறுத்திடும்போது!

கிடைத்த பதவிபோதும் சுகபோகம் போதும் என்று இருந்திருந்தால்? வழக்கு எழாது! வாழ்த்துக் கிடைத்திடும். ஆனால் அந்த வாழ்த்திலேகூட விஷம் கலந்திருக்கும்;

கருப்பர் இனத்தவராக இருப்பினும் கண்ணியமாக, திறமையுடன் நடந்துகொண்டார்!

கருப்பு இனத்தவர் கண்ணியமாக நடந்துகொள்ள மாட்டார்கள், திறமையாக நடந்திட மாட்டார்கள், என்ற பொதுவான குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கருப்பு இனத்தில் தவறிப் பிறந்தவர்!

என்ற பட்டம் தரப்படும்; சூட்டிக்கொள்ளலாம்.

இனத்தை இழிவுபடுத்துபவர்; ஏன் என்று கேட்கக்கூடாது. தனி மனிதருக்குப் புகழ் தருவர்; பெற்று மகிழலாம்!

இந்த வாரம் வெளிநாட்டில்...

ஜாகர்தா, ஏப். 8—இந்தோனேஷியாவின் உண்மையான ஆட்சியாளன் தான்தான் என்றும், ஐ. நா. அமைப்புச் சீரமைக்கப்படும்வரை, தன் நாடு, அந்த அமைப்பில் அங்கம் வகிக்காது என்றும் கூறினார் சுகர்னோ.

பாரிஸ், ஏப். 8— இந்தியாவின் உணவு நிலைமை, சில தகவல்கள் காட்டுவதுபோல அவ்வளவு பயங்கரமானதாக இல்லை என்று 'லெ பிகாரோ' என்ற பிரெஞ்சு இதழ் தெரிவித்துள்ளது.

ஐ. நா. ஏப். 9— வெளிநாடுகளில் உணவு உதவி கோரி நிற்கும் இந்தியா, தன் பாதுகாப்புக்கு ரூ. 170- கோடி செலவிடலாமா என்று பாக். பிரதிநிதியின் வினவுக்கு, ஊதாண்ட், இந்தியப் பகுதியின் நிலைமைக்காக, அந்நாட்டின் பட்ஜெட் பற்றித் தான் மதிப்பீடு செய்யத் தயாரில்லை என்றார். இந்தப் பதில் மிகவும் சூடானது என்று ராஜதந்திர வட்டாரங்கள் கருதுகின்றன.

மாஸ்கோ, ஏப். 9—சோவியத் கம். கட்சி மத்தியக் குழுவிலிருந்த, தம் மெம்பர் பதவியையும் குருச்சாவ் இழந்துவிட்டார் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

சைகோன் ஏப். 10—தென் வியட்நாமில் ராணுவ ஆட்சியை எதிர்த்து, மாணவர்களும், பௌத்தர்களும் பெரிய கலவரம் செய்தனர். அமெரிக்க எதிர்ப்புக்கோஷங்கள் முழங்கப்பட்டன.

ராவல்பிண்டி ஏப். 10—பிரதமர் கோசிஜின், தாஷ்கண்ட் உடன்பாடுமீறல் தொடர்பாக, பாகிஸ்தானுக்கு வருகைதருவார் என்று நம்பப்படுகிறது.

ஐ. நா. ஏப். 10—ரொடீஷியா மீது, முழுமையான நடவடிக்கை எடுக்க பிரிட்டனுக்கு முழு அதிகாரத்தை பந்தோபஸ்துசபை அளிக்கவேண்டுமென ஆப்பிரிக்க நாடுகள் மூன்று கோரியுள்ளன.

ஜாகர்தா, ஏப். 10 — இந்தோனேஷியாவில் கம்யூனிஸ்டு பார்லிமெண்ட் உறுப்பினர்களையும், பிற கம். சார்பு நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் டிஸ்மிஸ் செய்துள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

லண்டன், ஏப். 11— ரொடீஷியா சென்றுகொண்டிருந்த 'மனுலா' என்ற எண்ணெய்க் கப்பல் தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

நியூயார்க், ஏப். 12 — அமெரிக்காவில் மீண்டும் 'பறக்கும்தட்டு' பற்றிய பீதி அதிகரித்திருக்கிறது என்றும், இதுதொடர்பான ஆராய்வில் மண்ணில் 'ஏதோ ஒருவித' நடமாட்டம் இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

சைகோன், ஏப். 13 — வியட்நாமிய ஆட்சி அதிகாரத்தை மக்களிடம் ஒப்படைக்கத் தயார் என்று ராணுவத் தலைவர் ஜெனரல் நிகாயன் வான்தேயு கூறியுள்ளார். இதற்கான கால வரம்பு இன்னமும் நிர்ணயிக்கப்படவில்லை யென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையினை உணர்ந்த ஆபிரகாம்ஸ், வழக்கு மன்றத்திலேகூடி டில்மனை ஒழித்துக்கட்ட ஏன் விரும்புகிறார்கள் என்ற இரகசியத்தை அம்பலப்படுத்த முனைந்தார். அதனால்தான், ஐந்தாவது குற்றம்—அடிப்படைக் குற்றம்—என்பதுபற்றிப் பேசுகிறார்.

தம்பி! அவருடைய விளக்கத்தில், நூலுடைய தலைப்பு இருக்கிறதே மனிதன் என்ற தலைப்பு—அதனையே எடுத்து ஒரு தத்துவமாக்கிக் காட்டுகிறார்.

மனிதன்! மனிதன்! என்று தம்பி! எல்லோரும் தான் பேசுகிறோம், என்ன எண்ணிக்கொண்டு பேசுகிறோம்? என்ன பொருள் தந்து பேசுகிறோம்? எண்ணிப் பார்த்திடும்போதுதான விந்தையான பல உண்மைகள் நமக்குத் தோன்றிடும்.

நானும் மனிதன்தான்!

அவன் ஒரு மனிதனா? எல்லோரும் மனிதர்கள் தானய்யா!

மனிதனுக்கு மனிதன் என்ன வித்தியாசம்

மனிதனாகப் பிறந்துவிட்டால் போதுமா!

அவன் மனிதன் அல்லய்யா...!

மனிதன் செய்கிற காரியமா இது!

இப்படிப் பல்வேறு நிலைகளில் பல்வேறு முறையாகப் பேசுகிறோம்.

ஜனதா ஆயுர்வேத வைத்தியசாலை
JAVS
உரிமையாளர்
M. அமீர்பாட்சா
மதராஸ் ஸ்டேட் சோல் ஏஜண்ட்
54, சோலைஹால்ரோடு. திண்டுக்கல்.

ஏஜன்சி இல்லாத ஊர்களுக்கு ஏஜன்சி தேவை!

எங்களிடம் கோல்டன் டானிக் [பேட்டன் டானிக்] தசமூலாரிஷ்டம், பிரசாதிக்கசுதா, பாலாமிருதம், சுதாமிருதம், கதலிக்கல்பம், செவனப்பிரகாசம், ரதிரமணன், ஆஸ்த்துமா, க்ஷயம், டி. பி. இவைகளுக்கு சிறந்த லேகியம்

'கருங்குரங்கு ரஸாயனம்'
மற்றும்
'மதுகாசவம்'
முதலிய ஆயுர்வேத மருந்துகளும் கிடைக்கும்.

ஏஜன்சிகளுக்கு நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

மனிதன் என்றால் என்ன பொருள்?—இது பற்றியே வழக்கு மன்றத்தில் விளக்கம் அளிக்கப்படுகிறது.

பல்வேறு சிந்தனையாளர்கள் தந்துள்ள விளக்கங்களை எடுத்துக் காட்டிவிட்டு, இறுதியாகக் கூறுகிறார்.

மனிதன் மிருகமல்ல!

இதைக் கூடச் சொல்லவேண்டுமா என்று கேட்கத் தோன்றும், தம்பி! ஆனால் நீக்ரோக்களை, 'மிருகம்' என்று கூட அல்ல, 'உடைமை' என்றே அமெரிக்க 'நீதி' மன்றங்கள் கூறியுள்ளன என்பதை மறந்துவிடக் கூடாது.

இங்கு மட்டும் என்ன!! ஜாதியால், பொருளாதார நிலையால் மூட்டப்பட்டுவிடும் வெறுப்பும் கேவலஉணர்ச்சியும் ஆட்டிப் படைக்கும் நிலையில் உள்ளவர்கள், தம்மிலும் தாழ்ந்தவர்கள் என்று கருதப்படுபவர்களை மனிதர்களாகவா நடத்துகிறார்கள். மிருகமாக! மிருகத்தை விடக் கேவலமாக!!

டாக்டர் அம்பேத்கார் ஒரு முறை கூறினார், ஒரு உயர் ஜாதி இந்து தன்னுடைய நாயிடம் பரிவு காட்டித் தொட்டு விளையாடுவான், ஒரு தாழ்த்தப்பட்டவனைத் தொடமாட்டான் என்று.

மிருகங்கள் பலஉள; சிங்கம், புலி, நாய், நரி, ஓநாய்!—இப்படி. ஆனால் பித்துப்பிடித்தவனன்றி மற்ற எவனும் மனிதனுக்கும் மிருகத்துக்கும் வித்தியாசம் தெரியாமல் குளறமாட்டான்.

ஆனால் நமது நாட்டிலே சிலர், கருப்பு நிறம் கொண்டவர்களை அந்த நிறம் காரணமாகவே, மிருகம் என்று கூறுவதைக் கேட்டிருக்கிறேன்.

இது மடத்தனம், அல்லது வெறுப்பு என்பதும், இந்த முட்டாள்தனத்தைப் போக்கவல்லது கல்வி அறிவு என்பதையும் உணர்ந்திருக்கிறேன்.

மனிதன்—மிருகம்—இவைபற்றிய விளக்கம் கூறுவதற்காகப் பொறுத்திட வேண்டுகிறேன்; ஆனால் இந்த வழக்கு நடைபெறும்போது இந்த விளக்கத்தை மறந்துவிடாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வழக்கு நடப்பது, நாற்கால் பிராணிமீது அல்ல! ஒரு மனிதன்மீது! உங்களைப்போன்ற ஒரு மனிதன் மீது! அதை மறந்துவிடாதீர்கள்.

நான் குறிப்பிடும் ஐந்தாவது குற்றச்சாட்டு என்ன வென்றால் டக்ளஸ் டில்மன் நீக்ரோ என்பதை மறந்து அமெரிக்கக் குடிஅரசுத் தலைவராக அமருவதற்கு இணங்கினார் அல்லவா, அதுதான்!

நீக்ரோ யார்? முழுமனிதன் அல்லவே! மட்டம்! இரண்டாந்தரக் குடிமகன்! மிருகம்!—அப்படித்தானே நிற வெறியர்கள் கருதுகின்றனர், பேசுகின்றனர்.

நீக்ரோ, முழுமனிதன் அல்ல! ஆகவே அறிவுள்ளவனாக இருக்க முடியாதே! ஆகவே அடக்கி வைக்கப்படவேண்டியவன்!! இல்லையென்றால், குடித்துவிட்டு உருளுவான், குமரிப் பெண்களைக் கெடுத்திடத் துடிப்பான்!—அப்படித்தானே வெள்ளை இனத்தின் உயர்வு பற்றிய வெறியுணர்ச்சி கொண்டோர் கருதுகின்றனர்.

முகப்பில்:

அண்மையில், நாவலர் நெடுஞ்செழியன் வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தபோது, இலண்டன்மாநகரத்து பொருட்காட்சி சாலேக்குச் சென்று பார்வையிட்டார். அதுபோது தம் நண்பர் லெ. மெய்யப்பன் அவர்களுடன் பொருட்காட்சிச்சாலேயின் முகப்பில் நிற்பதை நாம் காண்கிருேம்.

அப்படிப்பட்ட ஒரு கருப்பன், உயர்ந்த இனமான வெள்ளேயர்களேயும் சேர்த்து ஆளத்தக்க நினேப்பு கொள்ளலாமா! குடிஅரசு தலேவர் ஆகலாமா!! பெரிய குற்றமல்லவா! மன்னிக்கப்பட முடியாத குற்றமல்லவா!

டக்ளஸ் டில்மன் செய்த குற்றம் இதுதான்— அடிமை இனத்தவன் இவன்! ஆளப்பிறந்தவர் வெள்ளேயர்! இந்த நியதியை மறந்தானே!! குடிஅரசுத் தலேவன் என்ருனே! அதுதான் அவன் செய்த குற்றம்.

குற்றப் பட்டியலில் அது இல்லே; வெள்ளே வெறியரின் உள்ளத்தில் அதுதான் மேலோங்கி நிற்கிறது.

அந்தக் குற்றத்தை வெளியே கூறக் கூச்சப்பட்டுக்கொண்டு வேறு பலவற்றை இட்டுக்கட்டி இருக்கிருர்கள்.

நான் ஒரு மனிதனுக்காக வாதாடுகிறேன் — மனிதன் மிருகமல்ல என்ற தூய கருத்துக்காக வாதாடுகிறேன்.

தம்பி! வழக்கறிஞரின் இந்தப் பேச்சு உள்ளத்தைத் தொடுகிறது; ஆனுல் வெள்ளேயர் தலேவர் ஒருவர் வெகுண்டெழுந்து இது வழக்குக்குத் தொடர்பற்ற பேச்சு, விபரீதப பேச்சு, இதனே மேலும் அனுமதிக்கக் கூடாது என்றெல்லாம் கூறுகிருர் நீதிபதியும், மேற்கொண்டு இது பற்றிப் பேச அனுமதி கிடையாது என்று அறிவித்துவிடுகிருர்.

மேலும் பேசுவானேன் தம்பி! மனிதன் மிருகமல்ல! அந்த ஒரு வாக்கியமே போதுமே; அதிலே பொதிந்துள்ள பொருள் ஏடுபல கொள்ளுமே! நல்லவர் உள்ளத்தை உருக்குமே! அதுபோதும்!

மனிதன் மிருகமல்ல! என்பது மட்டும் தம்பி! உலகிலே அதிலும் குறிப்பாக 'உயரிடங்களிலே' ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டால்!

மனிதன், மிருகமல்ல! என்பது மட்டும், நமது எல்லாச் செயல்களுக்கும் அடிப்படையாக அமைந்துவிட்டால்!!

மனிதன், மிருகமல்ல! இதனே மட்டும் ஆட்சியாளர்கள் உணர்ந்துவிட்டால்!

நாடு, காடு ஆகிடாது! நல்ல நாடு கண்டிடலாம்.

தம்பி! வழக்கிலே டில்மன் குற்றமற்றவர் என்பது மெய்ப்பிககப்படுகிறது என்பதுபற்றியும், தன்னேக் கற்பழிக்க முயன்றதாக குற்றம்சாட்டிய சாலி வாட்சன் எனும் மாது, உண்மையை எடுத்துரைத்து, டில்மன் மீது ஏற்றப்பட்ட பழியைத் துடைத்திட்டாள் என்பதையும் முன்பே குறிப்பிட்டுக் காட்டினேன்; நினேவிலிருக்கும் என்று நம்புகிறேன்.

வழக்கு முடிகிறது; டில்மன் குற்றமற்றவர் என்ற தீர்ப்புக கிடைக்கிறது; வழக்கறிஞரும் அவர் போன்ருரும் மகிழ்கின்றனர்; குடிஅரசுத் தலேவர் டில்மன் தமது 'கடமை'யைக் கவனிக்கச் செல்கிருர் என்ற முறையில் ஏடு முடிகிறது.

ஏடு, ஒரு நல்ல முடிவைக் காட்டுகிறது. நாடு? அதுபற்றித் தம்பி! எண்ணிப் பார்த்திடத் தான் இவ்வளவும் சொல்லிவைத்தேன்.

அண்ணன்,



விற்பனேயாகிறது!

அறிஞர் அண்ணுவின் வாழ்த்தும்
'மஞ்சரி' இதழின் பாராட்டும் பெற்ற

கதிர்

(இலக்கியத் திங்கள் இதழ்)

ஆசிரியர்: ப. புகழேந்தி

ஏப்ரல் இதழில்

பிரபல எழுத்தாளர் சுந்தர ராமசாமியின்
மிகச்சிறந்த சிறுகதை.
கவிஞர் குயிலன் கவிதை
மற்றும், வழக்கமபோல தெலுங்கு, கன்னட, மலேயாளச் சிறுகதைகள்—இவற்ரேடு,
காரூர் நீலகண்ட பிள்ளே (ஓர் அறிமுகம்)
வாழ்க்கை என்ருல் என்ன? — கட்டுரைகள்
'பொன்னேடுகள்'
'பூக்கூடை'
துணுக்குகள்—செய்திகள்.

விலே 40 காசு

முன்பணம் கட்டும் விற்பனேயாளர் விண்ணப்பிக்க:
கதிர், சென்னே-6

உலக அரங்கில்:

சுவரின்றி சித்திரம்!

தெற்கு வியட்நாமில் மேலும் ஒரு தோல்வியைச் சுமந்து கொண்டுவிட்டது அமெரிக்க அரசு. அதிபர் ஜான்சனின தெற்கு வியட்நாமியக் கொள்கைக்கு ஏற்கனவே ஒரு தீவிரமான மாற்றுக் கருத்து இருந்துவரும் ஒரு நிலையில் இப்போது செய்கோனிலிருந்து வரும் செய்திகள் அதற்கு இன்னும் பக்க பலம் அளித்து உள்நாட்டில் வாஷிங்டன் அரசுக்கு ஒரு பலதத எதிர்ப்பைத் தோற்றுவததாலும் ஆச்சரியமடைவதற்கு ஏதுமில்லை.

1963-ல் 'தீயம்' ஆட்சிக்குப் பின்னர் தெற்கு வியட்நாமில் நிலையான உள்ளாட்சி இல்லை. உலகின் கவனத்தை ஈர்த்து வியட்காங் புரட்சிப் படையோடு பொருதியும், தாக்குதலுககு உள்ளாகியும் வடக்கு வியட்நாமின நீங்காதபகையையும்பெற்று இயங்கிக்கொண்டிருக்கும் தெற்கு வியட்நாமில் உள்நாட்டு அமைதி, கட்டுக்கோப்பு இவை இரண்டும் இல்லாமலேயே இருந்து வந்திருக்கின்றன.

இடைப்பட்ட மூன்று ஆண்டுகளில் ஐந்து பேர் ஆட்சிப் பொறுப்புக்கு வநது சென்றுவிட்டனர்—ஒரு சிலா உயிர் பிரிந்த நிலையில்!

இப்போது வைஸ்மார்ஷல் 'கி'யும் நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிறார்.

வடக்கு மாநிலங்களை அரவணைத்துச் செல்லாமலும் அதிகாரத்தைத் தவருகவும்தனது விருப்புவெறுப்புக்களுககு ஏறறவகையிலும் பயன் படுத்தியதன விளைவாகவும் அவர் மீது எழுந்த அவநமபக்கை சல சலபபாக மாறி புத்த மதததினரும் கலலூரி மாணவர்களும ஈடுபாடு கொணட பெரும் புரட்சியாகத் தோன்றிவிட்டது.

பிரதமா 'கி' இராணுவ அடிப் படையில உள்ள தனது அமைசசரவையை உடன கலைததுவிட்டு மககள பிரதிநிதிததுவம பெறற ஒரு ஆட்சியை ஏறபடுதத வேணடும எனபது இபபோலைதய புரட்சியின நோககங்கள. இதற்குச் செவி சாயக்கவில்லை யென்ருல தெற்கு வியடநாமிலேயே சில பகுதிகள பிரிநது சென்று தனி மாநிலங்கள் அமைததுவிடும என்ற அளவுக்கு எதிரபபு வலைமையாக இருநதது. ஆட்சிலைய மககள பிரதிநிதிததுவம் பெறற அரசுக்கு மாற்றுவதற்கு 'கி'யும ஒபபுக கொணடுளளார். அது எததனைக காலததுக்குள் எனபதிலதான இபபோது கோரிக்கை வாக்குவாதத்தில் இருப்பதாகத் தெரிகிறது.

"உள்நாட்டில் ஆட்சி மாறவேண்டும்" என்று குரலெழுப்பியதோடு நிற்கவில்லை புரட்சியாளர்கள். "அமெரிக்காவே வெளியேறு" என்றும் பல பகுதிகளில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்திருக்கின்றன. 2,30,000 படைவீரர்கள், மற்றும் டாங்குகள், விமானங்கள் விஞ்ஞான சாதனங்களை அங்கு வைத்திருக்கிறது அமெரிக்கா. ஆனல் உயிருக்கும் உடைமைக்கும் பயந்து கொண்டு டாநங், ஹியூ பகுதிகளில் உள்ள சாதாரண அமெரிக்கர்கள் படை முகாம்கள் நோக்கிப் பாதுகாப்புக்காகச் செல்ல வேண்டிய அளவுக்குப்புரட்சியாளர்களால் அச்சுறுத்தப்பட்டிருக்கின்றனர்.

தெற்கு வியட்நாமில் அதன் கொள்கைக்கு எதிர்ப்போ, திருத்தமோ தெரிவித்து வருபவர்கள் எல்லோரையுமே கம்யூனிச அனுதாபிகள் அல்லது அமெரிக்க எதிர்ப்பாளர்கள் என்று எடை போட்ட அமெரிக்கா 1963-க்குப் பிறகு செய்கோனில் தோன்றிய ஆருவது பிரதமர் 'கி'யும் அப்புறப்படுத்தப்பட இருக்கிருரே அதற்கு எத்தகைய விளக்கம் சொல்லப்போகிறது என்பதும் புரியவில்லை.

தெற்கு வியட்நாமில் ஒரு நீடித்த உள்ளாட்சி, 14 இலட்சம மக்களைக் கொண்ட அந்த நாட்டுக்கு அமைதியும் கட்டுக்கோப்பும் கொண்ட வாழ்க்கை இவை இரண்டையும் ஏற்படுத்தாமல் கம்யூனிச பயங்கரத்தைத தடுக்கிறேன என்று கூறுக் கொண்டு குண்டுகளையும் படைகளையும குவித்துவிடுவது சோகை நோயபபிடிததவனைத தூககிநிறுததி கோதாவில எதிரியுடன் பொருதவிடுவது போலததான.

அன்னம் என்று கருதப்பட்டு அமெரிகக அதிபரால ஹோனலூலுவுககு அழைததுப பேசபபட்ட 'கி' ஒரு வாதது என்பது இப்போது தெளிவாகிவிட்டது. இதைப புரிநது கொள்ளாமல் "தெறகு வியடநாம அமெரிககாவின உயிாககொளகை' என்று நினைததுக கொள்வதில் பொருள இல்லை.

செய்கோன் அரசை அமெரிக்கா ஆதரிபபதன காரணம அது வியட்நாம் ஊடுருவலைத் தடுக்கவேண்டும்-ஹனுய் அரசின் ஆபத்தை அப்புறப்படுத்தவேண்டும் என்பது என சொல்லபபடுகிறது.

ஆனல் சுவரே இல்லாத ஒரு நிலையில் தூரிகையில் வண்ணக் கலவையைப் பக்குவமாகக் குழைத்துக்கொண்டு நின்று என்ன பயன்?

இதையேதான் நியூயார்க்டைம்சின் ஜேம்ஸ்ரெஸ்டன் சொல்கிருர்: தெற்கு வியட்நாமில் அரசு கிடையாது' ஆட்சி கிடையாது; அது ஒரு தேசமே இல்லை—என்று.

அதேபோல அங்கு இப்போது எழுந்துள்ள புத்த மதத்தினர், மாணவர்கள் சேர்ந்து நடத்தும் புரட்சி வியட்நாம் படைக்கோ, வடக்கு வியட்நாமுக்கோ ஆதரவு தரும் முயற்சி அல்ல என்ற சுயதிருப்தியில் அப்புரட்சி அமெரிக்காவுக்குத் தெரிவிக்கும் எதிர்ப்பாக இருக்கிறது என்ற உண்மையை மட்டும் மறந்துவிடக் கூடாது.

அமெரிக்காவிலேயே வாஷிங்டன் அரசின் வியட்நாமியக் கொள்கைக்கு எவ்வாறு எதிர்ப்பு இருக்கிறதோ அதுபோல தெற்கு வியட்நாமிலேயே கணிசமான பகுதியினர் அமெரிக்க ஈடுபாட்டை அல்லது அமைதியான நீடித்த அரசைத தோற்றுவிக்க முடியாத அதன் ஈடுபாட்டை விரும்பவில்லை; எதிர்க்கின்றனர். எனவே தெற்கு வியட்நாமில் தனது கொள்கை சரியானதே என்று அமெரிக்கா வாதிட வருவதற்கு முன்னல் இருபெரும தேவைகளைப் பூர்ததி செயயவேணடும்.

(1) தெற்கு வியட்நாமில நிலையான அமைதியைக் கொடுக்கும் மககள் ஒப்புதலைபபெற்ற அரசு.

(2) அமெரிக்க ஈடுபாடு சரியே; தேவைதான் என்ற தெறகு வியடநாமிய மக்களின் ஏகோபித்த ஒப்புதல.

இவை இரணடையும ஏற்படுத்தாத வரையில வியடநாமியக கொளகையில தனது நிலை சரி என்று உலக அரங்கில் வாதிட்டு ஆதரவைப் பெறுவதென்பது முடியாது-அமெரிககாவினுல்.

—யாரோ.

இருபதாம் பகுதி

'அனாதையா நீ?'

மாடிப்படிகளிலே செந்தாமரை குதித்து இறங்கிவந்து, தூமகேது இருந்த அறையின் பட்டுத் திரையைத் தள்ளியபடி, "நமஸ்காரம்! நமஸ்காரம்!" என்று சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்தாள்.

இளங்கன்னியரின் நடன ஓவியங்களும், பளிங்குக் கல்லாலான புலியுமிருந்த அந்த அறையில் — முன்பு சோலையப்பன் உட்கார்ந்திருந்த அதே அறையில்—ஓர் ஆசனத்தில் அமர்ந்த தூமகேது, செந்தாமரை வந்ததையும 'நமஸ்காரம்' என்றதையும் கவனிக்காமல், ஓலையில் ஏதோ அவசரமாக எழுதிக்கொண்டிருந்தான்.

சோலையப்பனை ஏமாற்றி நம்பச் செய்த தன் திறமையைக் கூறி, அதற்காக அந்த ஒற்றர் நாயகத்தினிடம் 'சபாஷ்' பட்டம்பெற, அவள் இரண்டு மூன்று படிகளை ஒன்றாகத் தத்திக்குதித்து ஓடிவந்தாள். ஆர்வத்தோடு தன் வருகைக்காகக் காத்திருப்பான் என்று எதிர்பார்த்து வந்தவளுக்கு, ஆழ்ந்துவிட்டிருக்கிறான் ஓலை எழுதுவதில் என்பதைக் கண்டதும், சிறிது ஏமாற்றம் உண்டாயிற்று.

தூமகேதுவிற்கு எதிரே சிறிது தூரத்திலிருந்த பளிங்குக்கல் புலியின் தலைமீது ஒரு கையை ஊன்றிக்கொண்டு, அவள் பேசாமல் நின்றாள்.

தூமகேதுவின் முகத்திலிருந்த சுருக்கங்களையும்-அந்தச் சுருக்கங்கள் பாம்பின் தோலைப்போலச் சுருங்கிச் சுருங்கி விரிவதையும், அவனது கழுகு மூக்கின் முனையிலே அரும்பிய வியர்வையையும், உயரமான புருவங்கள் மேலே எழுவதையும் இறங்குவதையும் காணக் காண — சோலையப்பனைப் பற்றிச் சொல்லவேண்டுமென்றிருந்த ஆர்வம், கொஞ்சம் கொஞ்சமாகத் தணிந்துகொண்டே வந்து, அவள் மனதில் அச்சம் உண்டாகத் தொடங்கியது.

"உள்ளே நான் வந்ததையும், இவ்வளவு நேரம் நிற்பதையும்கூடக் கவனிக்காமல், அப்படி என்ன எழுதிக்கொண்டிருக்கிறார்" என்று நினைத்து, அவனது எழுத்தாணியின் ஆட்டத்தைக் கவனித்தாள். அவன் தலை நிற்காமல், கரிக்குருவியின் வாலைப்போல ஆடிக்கொண்டிருந்ததே ஒழிய, அதனின்றும் இன்ன எழுத்துத்தான் உருவாகிறது என்பதைக் கண்டுகொள்ள முடியவில்லை.

அந்த ஓலையை எழுதி முடித்ததும், அதைத் திரும்பவும் ஒருமுறை படித்துப் பார்த்துவிட்டு அவன் நிதானமாகத் தலையை நிமிர்த்தினான்.

"ஓகோ, நீ வந்துவிட்டாயா, செந்தாமரை! ஏன் நிற்கிறாய் — இப்படி உட்கார்! வந்து அதிக நேரமாகிறதோ?"

"கொஞ்ச நேரமாகிறது! அவசரமாக ஏதோ எழுதிக்கொண்டிருந்தீர்-அது கெடக்கூடாது என்று பேசாமலிருந்தேன்."

'சோலையப்பன் போய்விட்டானா?'

"அவனா போவான்—நானே அனுப்பிவைத்தேன்!"

"ஏதாவது புதிய தகவல் கிடைத்ததா?"

"அந்த அசகாயசூரனிடமிருந்தா அவ்வளவு சுலபத்தில், இரகசியத்தைக் கறந்துவிட முடியும்? சிரித்துப் பேசுகிறான் — திடீரென்று சீற ஆரம்பிக்கிறான்! என் பார்வையும் பேச்சும் ஒருகணம் அவனை மயங்கச் செய்கின்றன — மறுகணம் எதையோ நினைத்துக்கொண்டு மருட்சியடைகிறான்! ஏற இறங்கப் பார்த்து, வலிய உண்டாக்கிக் கொண்ட உறுதியான குரலில் பேச ஆரம்பிக்கிறான்! இன்று என்ன நடந்தது தெரியுமா.......என்று சோலையப்பன் வந்தது முதல் அவன் போகும்வரை நிகழ்ந்ததையெல்லாம் கூறிமுடித்தாள்.

'எப்படிச் செந்தாமரை என் திட்டம்-அவன் வலையில் விழுந்தது. அந்த அறையைக் கண்டுதானே? புத்தரின் சிலையையும் பொன்னையாவின் ஓவியத்தையும் காட்டியே, எவனெவன் சூழ்ச்சிக்காரன் என்பதைக் கண்டுபிடித்துவிடலாம் என்று அன்று நான் சொன்னபோது, உனக்கு அவ்வளவாக நம்பிக்கை ஏற்படவில்லை அல்லவா?"

"ஆமாம்!"

"இப்போது பார்த்தாயா? விஷக்கன்னி என்று உன்னைத் தூற்றினேன்-அது விவேகமில்லாத பேச்சு என்று தெரிந்துகொண்டேன்! நீ புதுமைப் பெண், புரட்சிமலர் என்ற உண்மையைக் கண்டு உள்ளம் தெளிந்தேன்-என்று சோலையப்பன் சொல்லும் அளவிற்கு, அவன் மனதிலே இருளைக் கொட்டியது அந்த அறைதானே? கானல்வரியைப் பற்றி அந்தக் கபோதி ஏதோ கூறினான் என்றாயே, அதைத் திரும்பவும் சொல் சிரிப்பாக வருகிறது எனக்கு!"

ஆர்வத்தோடு கேட்டபடி, அவன் ஆசனத்தைவிட்டு எழுந்து நின்றான்.

"இந்தப் பாடல்களை மாதவி பாடித்தான் — கோவலனை இழந்து துன்பக் கேணியில் விழுந்தாள்! அதே பாடல்களை இந்தச் செந்தாமரை தீட்டிக்காட்டித்தான்—இந்தச் சோலையப்பனை இழுத்து இன்பக் கேணியில் நீந்தி விளையாடப் போகிறாள்!..........இப்படிச்

சொல்லியபோது, அந்தக் கொக்கரித்த வீரனின் முகத்தைப் பார்த்திருக்க வேண்டுமே! அசடு வழிந்தது! விழுந்து விழுந்து சிரிக்கவேண்டும் போலிருந்தது — சிரமப்பட்டுச் சிரிப்பை அடக்கிக்கொண்டேன்!' என்று கூறி அவள் கலகலவென்று சிரித்தாள்.

தூமகேதும் சால்போன்ற தன் வயிறு குலுங்க, விகாரமான பற்கள் வெளியே தெரிய கைகொட்டி ஆடி ஆடிச் சிரித்தான. அவன் சிரிக்கும் கோரத்தைக் கண்டதும் அவளது சிரிப்பு இன்னும் அதிகமாயிற்று. அந்த அறையே கிடுகிடுக்கும்படியாக இருவரும் விலா நோகச் சிரித்தனர்.

"உங்களைப்பற்றி, அந்த ஆணவக்காரன் எவ்வளவு கேவலமாக சொன்னான் தெரியுமா?'' என்றாள் அவள், சிரிப்பை நிறுத்திக் கொண்டு.

"என்னைப் பற்றியா? கேவலமாகவா?''

"ஆமாம்! ஆந்தையும் கோட்டானும் போல, நீங்களும் உமது ஆட்களும் இந்தப் பாண்டிய நாட்டில் பவனி வருகிறீர்களாம்!'

"என்ன கர்வம் அவனுக்கு!" என்று கோபத்தோடு பற்களைக் கடித்தபடி கூறி, பழையபடி ஆசனத்தில் போய் உட்கார்ந்தான்.

விழுந்து விழுந்து இவ்வளவு நேரமும் சிரித்துகொண்டிருந்தவனின் முகம், கோரமாக மாறிவிட்டது. சதை தொங்கிக் கொண்டிருந்த அவன் முகத்தில் ஆந்தையும் கோட்டானும் ஊஞ்சலாடுவதைப் போல, அவளுக்குத் தோன்றியது. அப்படி வேண்டுமென்றே சொல்லியதால்தான், அவனது ஆபாசச் சிரிப்பு நின்றது. இல்லாவிட்டால் வயிறு வெடித்து விட்டிருக்குமே என்று நினைத்து அவள் உள்ளூரச் சிரித்துக் கொண்டாள்.

"நீங்கள் ஏன் இப்பொழுது அவன் மீது கோபமடைகிறீர்கள்! சோலையப்பன் அல்லவே அவன்— இப்போது அவன்தான் கோவலனாக மாறிவிட்டானே! என் வேல்விழிகளெனும் கயிற்றினால், ஆட்டுவிக்கப் படும் சித்திரப் பதுமைதானே இனி அவன்! என் உதட்டிலே அரும்பிடும் புன்னகை—அவன் உள்ளத்திலே புதைந்துள்ள திட்டங்களை யெல்லாம் வெளியே கொண்டு வந்து தள்ளிவிடாதா?''

"உண்மைதான் செந்தாமரை! கர்ஜித்துப் பாய்ந்து வரும் சிங்கம் எவ்வளவு கொடியது! அதன் அருகே யாராகிலும் நெருங்க முடியுமா? நெருங்கிவிட்டால்தான் உயிரோடு திரும்ப முடியுமா? அப்படிப்பட்ட காட்டு விலங்குகூட உன் புன்னகையைக் கண்டால் நாய்க் குட்டியாக மாறிவிடுமே! அதன் பிடரிமயிரைக்கூட நீ தடவிக் கொடுக்கலாம். கோரப் பல்லைக்கூட நீ பிடித்து ஆட்டலாம்-அது உன்னை ஒன்றும் செய்யாது! அத்தகைய சக்திவாய்ந்த உன் புன்னகைக்கு எதிரே, அந்த அற்ப ஆயுசு எம்மாத்திரம்?' என்று அவன் புகழ்ந்தான் — அப்படிப் புகழ்ந்தால்தான் அந்தப் பேதை பூரித்துப் போவாள் என்ற அந்தரங்க எண்ணத்தோடு!

"நின்றுகொண்டே இருக்கிறாயே, உட்கார் செந்தாமரை!'' என்று சொல்லிவிட்டு எழுதிய ஓலையைக் கையில் எடுத்தான. அந்த ஓலையைப் பார்த்தபடி 'இந்த வேவு பார்க்கும் வேலை உனக்கு மிகவும் பிடிக்கிறது—அல்லவா?'' என்றான்.

"மிகவும் சுவையான வேலையாயிற்றே இது!'' என்று பளிங்குக் கல் புலியின் பல்லைத் தடவிப் பார்த்தபடி அவள் கூறினாள்.

அவன் ஓலையைப் பார்த்தபடி மௌனமாகச் சில நொடிகள் இருந்துவிட்டு "இந்த ஓலை யாருக்குத் தெரியுமா?" என்று கேட்டபடி அவளைப் பார்த்தான்.

தெரியவில்லையே என்று சொல்வதைப்போல அவள் தலையை அசைத்தாள்.

"எமது மன்னர் இராசாதிராச சோழருக்கு!''

"எதைப் பற்றி?''

"அவர் கேட்டிருக்கிறார்—ஒற்றர் குழுவில் முக்கியமாக இருக்கும் ஒவ்வொருவரின் தகவலையும் தெரிவிக்கும்படி! அதற்குத்தான் இந்தப் பதில்-இன்னும் இரண்டு நாட்களில் விவரம் அனுப்புவதாக!''

"அப்படியா?''

"ஆமாம் செந்தாமரை! அது சம்பந்தமாகத்தான் இன்று நான பகலிலேயே இங்கு வரவேண்டி நேரிட்டது!''

'தாங்கள் வந்திருப்பதாகச் சிதாரி வந்து சொன்னதுமே நான் தெரிந்து கொண்டேன்—ஏதோ அவசரமான வேலையாகத்தான் தாங்கள் வந்திருப்பீர்கள் என்று!''

பக்கத்திலிருந்த பீடத்தின் மீது ஓலையை வைத்துவிட்டு தூமகேது நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"என்னைப்பற்றி உனக்கு நன்றாகத் தெரியும் செந்தாமரை! அதனால்தான் முதலிலேயே கேட்டுக் கொள்கிறேன் ... அரசருக்குத் தகவல் அனுப்ப வேண்டியதற்கான விவரங்களை உன்னை நான் கேட்கும் போது—நீ தவறாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்று!''

"தவறாக ஒருபோதும் நான் எடுத்துக்கொள்ளமாட்டேன் — தாராளமாகத் தாங்கள் கேட்கலாம்!''

"நல்லது! எதையும் நீ என்னிடம் மறைக்கக்கூடாது!''

"மறைக்கவேண்டிய விவரம், அப்படியொன்றும் என் வாழ்க்கையில் கிடையாது!''

"நல்லது! ...... ஒன்பது மாதங்களுக்கு முன்புதான் உன்னை முதன் முதலாக நான் பார்த்தேன்! அது உனக்கு நினைவிருக்கிறதா?''

"நினைவிருக்கிறது!''

"அப்பொழுது தளபதி பாண்டியராசன் தந்தை மகளின் திருமணத்தில் நீ நடனமாடினாய்! உன் நடனத்தைக் கண்டு குழுமியிருந்தோர் பரவசமடைந்த நேரத்தில் உன் முகத்தையே நான் பார்த்துக்கொண்டிருந்தேன்!

அந்த அழகுமுகத்தின் உள்ளே ஏதோ கவலையின் நிழல் ஆடியசைவதாக நான் யூகித்தேன்! நடனம் முடிந்ததும் உன்னை அணுகினேன்! அந்தக் கவலைக்குக் காரணம் வறுமை என்றாய் நீ! ஒற்றர் குழுவில் நீ சேர்ந்து, அதில் கிடைக்கும் நல்ல ஊதியத்தைக் கொண்டு

விற்பனையாளர் தேவை

எமது "காஞ்சி" வார இதழை விற்பனை செய்ய கீழ்க்கண்ட ஊர்களுக்கு விற்பனையாளர்கள் தேவை.

நாச்சியார்கோயில்
பாலக்காடு
கோத்தகிரி
திருத்தணி
திருநின்றவூர்
ஆதண்டார்கொல்லை
வேதாரண்யம்

விவரங்களுக்கு

உரிமையாளர், 'காஞ்சி'
சின்ன காஞ்சிபுரம்.

வளமான வாழ்வு பெறலாம் என்றும் —வாழ்க்கையில் கவலையில்லாதிருந்தால் கலாசேவை செய்ய முடியுமென்றும் நான் கூறினேன்!"

"ஆமாம்!"

"அதன் பிறகு தேசபத்தியின் சிறப்பைப்பற்றி உனக்குக்கூறினேன்! இந்தப் பாண்டிய நாட்டை எதிரிகளின் கையில் ஒப்படைக்க நாட்டுத் துரோகிகள் செய்துவரும் பயங்கரச் செயல்களைப்பற்றி விவரித்தேன்! அவர்களை அடக்கி அழித்து—பாண்டியநாட்டில் அமைதியை நிலைநாட்டவேண்டிய அவசியத்தையும் சொன்னேன்! அதற்காக ஒற்றர் குழு ஆற்றிவரும் மகத்தான பணியை—சில நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டி — விளக்கினேன்! கலாதேவியின் திருப்பணியிலே ஈடுபட்டு அதனால் வறுமையும் வாட்டமும் அனுபவித்த உன்னை நாட்டுச் சேவையில் இறங்கச் செய்து அதனால் சீரும் சிறப்பும் பெறச் செய்தேன்!"

"உண்மைதான்! நாட்டியக்காரியாக அரங்கில் ஆடும்போது கிடைக்காத அமைதியும் ஆனந்தமும் வேவு காரியாகச் சுற்றிவரும்போது எனக்குக் கிடைத்தன!"

இப்படிச் செந்தாமரை சொல்லியதைக் கேட்டதும் தூமகேது பூரித்துப்போனான். இவள் மிகவும கூர்மையான அறிவுகொண்டவள். எதிரிலிருப்போரின் மனதைப் புரிந்துகொண்டு பேசுவதில் திறமை மிக்கவள். கவர்ச்சி நிறைந்தமுகம். காந்தக் கண்கள். சேல் விழியிலே ஒரு குறிப்பு — செவ்விதழிலே ஒரு குறுநகை—போதும், வீராதிவீரனும் சுருண்டு வீழ்ந்துவிடுவானே! இப்படிப்பட்டவளைத் தேர்ந்தெடுத்ததற்காக அவன் தன்னைத்தானே பாராட்டிக்கொண்டான்.

"உன்னால் ஒற்றர் குழுவிற்கே ஒரு சிறப்பு......"

"அந்த அளவு பெருமைக்குரியவள் அல்ல நான்! ஒற்றர் குழுவில் சேர்ந்தபிறகே எனக்குச் செல்வமும் சிறப்பும் வந்து சேர்ந்தன! அக்கினிப் பரீட்சைகளில் தேறிய பிறகு அல்லவா தாங்கள் என்னை வேவுகாரியாக்கினீர்கள்! அந்தச் சோதனைகளை எண்ணிப் பார்த்தால் இப்பொழுதுகூட என்மனம் அச்சத்தால் நடுங்குகிறது!"

"உன் குணம் என்ன, நடத்தை என்ன, நினைப்பு என்ன என்பனவற்றைச் சோதித்துப் பார்த்து அறியாமல் எப்படி உன்னிடம் நாட்டிற்கே உயிர்நாடியான பணியை ஒப்படைக்க முடியும்? ஆனாலும் உன்னைப்பற்றிய சில விவரங்களை இன்னமும் என்னால் அறிந்துகொள்ள முடியவில்லை! அவை குறிதது, அப்பொழுது நான் அதிகக் கவலை எடுத்துககொள்ளவில்லை! உன் குணத்தில் எனக்குப் பற்று ஏற்பட்டது! உன் நேர்மையில் எனக்கு உறுதிப்பாடு உண்டாயிற்று! உன் அழகிலும், அறிவிலும், துணிவிலும் எனக்கு நம்பிக்கைப் பிறந்தது! எனவே மற்றவற்றைப்பற்றி நான் அதிகமாகப் பொருட்படுத்தவில்லை! பொருட்படுத்தாதது மட்டுமல்ல, அந்த விவரங்கள் அவசியமற்றவை என்றும் எண்ணியிருந்தேன்! ஒற்றர் குழுவிலுள்ள முக்கியமானவர்களின் வாழ்க்கை விவரத்தை அனுப்பிவைக்கும்படி இப்பொழுது அரசர் கேட்டிருக்கிறார் — அந்தக் கடமையைச் செய்யவே, உன்னை ஏதேதோ கேட்கவேண்டி நேரிட்டுள்ளது!"

"இதை ஒரு சோதனையாக நான் எடுத்துக்கொள்ளவில்லை —தாராளமாகத் தாங்கள் கேட்கலாம்!"

"எதற்காக நான் இவ்வளவு தூரம் சுற்றிவளைத்துப் பேசினேனோ — அதை ஒரு நொடியில் புரிந்துகொண்டாளே! இவ்வளவு அறிவு நுட்பமானவளைத் தேர்ந்தெடுத்தேனே — அது என்னைத் தவிர, வேறு யாராலும் முடியக் கூடிய காரியமல்ல!" என்று அவன் தன் முதுகிலேயே தானே தட்டிக் கொடுத்துக் கொண்டான்.

"இந்த ஒன்பது மாதகாலத்தில் என்றாகிலும் ஒரு நாள், வேவுபார்க்கும் வேலையும் ஒரு வேலையா என்ற வெறுப்பு உனக்கு ஏற்பட்டதுண்டா?" என்று அவன் திரும்பவும் கேள்விகள் போடத் தொடங்கினான்.

"கிடையவே கிடையாது; இந்த வேவுபார்க்கும் வேலையில் ஏற்பட்டுள்ள தித்திப்பினால், எனக்குச் சில நேரங்களில நடனத்தின் மீதுகூடக் கசப்பு ஏற்பட்டதுணடு! நாட்டியமாடுவதை நிறுததிவிட்டு, அதற்காகும் நேரததையும இந்தப் பணியிலேயே செலவழிததால, இன்னும் எவ்வளவு நன்றாக இருக்கும என்று கூட நான் யோசிததுப் பார்ப்பது உண்டு!"

"கூடாது செந்தாமரை, நீ நாட்டியமாடுவதைநிறுததவேகூடாது!"

"நாட்டியததைத் தலைமுழுகிவிட்டால், நாட்டிறகான இந்த நல்ல பணியில் நான இன்னும தீவிரமாக ஈடுபடலாம் அல்லவா?"

"அதிலுள்ள சூட்சுமத்தைத் தான், உன்னால் தெரிநதுகொள்ள முடியவில்லை, செந்தாமரை! நாட்டியக் கலையின்மூலம் உன் புகழ்,

நாளுக்கு நாள் பல திசைகளிலும் பறந்து செல்கிறது! அந்தப் புகழையும், உன் எழிலையும் காட்டித்தான் நீ சொக்கு வித்தை ஆடமுடிகிறது! ஆகவே நீ நாட்டியமாடுவதை நிறுத்திக்கொண்டால், சொக்கட்டானிலே உன்காய் ஒன்று வெட்டப் பட்டுவிட்டது என்று அர்த்தம்! செந்தாமரை, ஆண்களிலே பல ரகம் உண்டு, பார்க்கும் பாவையின் முகம் மட்டும், பால்நிலவாக இருந்தால் போதும்...மனம் நெகிழ்ந்து விடுவர்—ஒரு ரகம்! களை முகத்தில் இல்லாவிட்டாலும், கட்டு உடலில் இருந்தால்போதும்......உள்ளத்தில் ஊறல் உண்டாகிவிடும்—மற்றொரு ரகம்! புகழ் இருந்தால் போதும், முகம் அழுதுவடிந்தாலும், உடல் காற்றில் பறந்தாலும், கவலையில்லை ...மண்டியிடத் தயாராய் இருப்பர்—இதுவேறொருரகம்! அறிவுள்ளவளா—அவளைச் சுற்றச் சிலர்! பணமுள்ளவளா — அவளுக்குப் பக்கத்தில் வரச் சிலர்! இப்படி விசித்திர மான குணங்கொண்ட ஆடவர் உலகை உன் ஒருத்தியால்தான் ஆட்டுவிக்க முடியும்?...உன்பெயர் தான் செந்தாமரை என்றால் முகமும் அதுபோலவே இருக்கிறது! கைதேர்ந்த சிற்பி செய்த கண்கவரும் சிலையையும் தோற்கடித்து விடுகிறது, உன் வனப்பான மேனி. நாட்டியக்கலையில் நீ அடைந்துள்ள புகழ்—இந்தப் பாண்டிய நாட்டில் மட்டுமல்ல சேர, சோழ மண்டலங்களிலே கூட இந்நாள்வரை எவளும் அடைந்ததில்லை! பழம்பெரும் நூல்களையெல்லாம், பாலும் பழமும் போல, நீ சுவைத்துண்டு செரித்திருக்கிறாய்! நாட்டுப் பணியில் என்று நீ ஈடுபட்டாயோ, அன்றே பொன்னும் பொருளும் உன் காலடியில் குவிந்துவிட்டன! எல்லாம் உன்னிடம் இருக்கின்றன—எவனை வேண்டுமானாலும் வீழ்த்த முடியும் உன்னால்!......'

அவள் முகம் சுருங்கிவிட்டதைக் கண்டதும் தூமகேது தன் பேச்சை நிறுத்திக்கொண்டான். பேச அவசியமில்லாததையெல்லாம் பேசி—கௌரவத்தைக் குறைத்துக் கொண்டதாக எண்ணி—தன்னைத் தானே அவன் நொந்துகொண்டான்.

தூமகேது தனக்குக் கீழே வேலை செய்பவர்களிடம், மிகவும் கண்டிப்பாக நடந்துகொள்வான். கண்டிதம் இல்லாவிட்டால் எந்தக் காரியமும் ஒழுங்காக நடக்காதென்பது அவன் கண்ட உண்மை. அவன் தலைவனாக இருக்கும் ஒற்றர் குழுவிலே பெண்களும் பலர் உண்டு. நல்ல அழகிகளாகப் பார்த்தே அந்த வேலைக்கு அவன் தேர்ந்தெடுப்பது வழக்கம். ஆனாலும் அந்தச் சுந்தரிகளிடம், அவன் அதிகாரத்தோடும், மரியாதையோடுமே நடந்து கொள்வான். கொஞ்சம் குழைவாக நடந்து கொண்டால் அவர்களை ஆட்டுவித்து வேலை வாங்க முடியாது என்பதை நன்கு அறிந்தவன் அவன்.

இல்லாவிட்டால், ஓட ஓட அஞ்சலையை விடமாட்டேன் என்று துரத்திக்கொண்டோடியவன் அடக்கத்தோடு அருகில் வந்து நிற்கும் அழகி செந்தாமரையையா சும்மா விட்டு வைப்பான்?

அவ்வளவு சடத்தன்மையோடு சகல பொறுப்புகளையும் கவனித்து வந்த அவன், செந்தாமரையைப் பார்த்துப் பேசியதில் உண்டான சிறு சபலத்தில் ஏதேதோ பேசி விட்டான்.

அப்படி அவன் பேசியபோது அவன் குரலிலே தொனித்த போதையையும், பார்வையிலே மின்னிய ஆசையையும் அறிந்து, செந்தாமரை வெறுப்படைந்தாள். இந்தக் கிழவீணையின் சுருதி இன்றென்ன புதுப்போக்கிலிருக்கிறது என்றெண்ணிக் கோபமடைந்தாள்.

அவளது அருவருப்பையும் ஆத்திரத்தையும் கண்டு, தூமகேது வெட்கமும் வேதனையும் கொண்டான். சொல்லத் தேவையில்லாததை எல்லாம் சொல்லி அவள் மனதிற்குத் தொல்லை தந்துவிட்ட தன் முட்டாள் தனத்திற்காக, அவன் தன்னைத்தானே சபித்துக் கொண்டான். ஆனால் அந்த வேதனையிலும், வேறொரு எண்ணம் அவனுக்கு மகிழ்ச்சியைத்தந்தது.

"அளந்து பேசும் நான் இன்று அளவைக் கடந்துவிட்டது ஏன்? இவளது அழகுதந்த போதையினால் தானே? ஆமாம், இவள் அழகு உறுதியான மனங்கொண்ட என்னையே ஆட்டி அசைக்கிறதென்றால், பருவக் கொந்தளிப்போடு இருக்கும் வாலிபனின் பாடு என்னவாகும்? கள்குடித்த குரங்காக ஆடிக்குதிக்க ஆரம்பித்துவிடமாட்டானா? ஆகா, என் வில்லுக்கு இவளைக் கணையாகத் தேர்ந்தெடுத்த என் திறமையே திறமை! என் அதிருஷ்டமே அதிருஷ்டம்!' என்று அவன் திரும்பவும் தன் முதுகிலேயே தட்டிக் கொடுத்துக் கொண்டான்.

அவன் மௌனமாகத்தரையைப் பார்த்துச் சிந்தித்தபோது, பளிங்குக்கல் புலியின் பல்லைப் பிடித்து அவள் ஆட்டிப் பார்த்தாள்.

'சரி, இனியாகிலும் இவளிடம் பத்திரமாக வார்த்தைகளை அளந்து பேசவேண்டும்!' என்ற முடிவோடு அவன் பார்வையை உயர்த்தி 'உன் பெற்றோர் எந்த ஊரில் இருக்கிறார்கள்?' என்று கேட்டான்.

"பெற்றோர் இல்லை!"

"உற்றார் உறவினர்?"

"ஒருவரும் கிடையாது!"

"என்ன, பெற்றோரும் இல்லை—உறவினர்களும் இல்லையா?"

"ஆமாம், நான் தனிமரம்!"

"அனாதையா நீ"

"ஆமாம்!"

"உன்னை வளர்த்தது யார்?"

"முத்தம்மாள்!"

"அவள் இப்பொழுது எங்கே இருக்கிறாள்?"

"நீங்கள் சொல்வீர்களே எமலோகம் என்று—அங்கே இருக்கிறாள்!'

"அய்யோ பாவம், இறந்து விட்டாளா?

"ஆமாம்!"

"அவளுக்கு எந்த ஊர்?"

"இதே மதுரைதான்! அவள் தான் என்னை வளர்த்துப் பெரியவளாக்கி, நாட்டியமும் கற்றுக் கொடுத்தாள்!"

"அவளிடம் உன்னைக் கொண்டு வந்துவிட்டது யார்? உன்னை அவள் வளர்க்கவேண்டிய காரணம் என்ன?"

என்ன பதில் சொல்வதென்பது புரியாமல், அவள் ஒருநொடி திகைத்து நின்றுவிட்டாள். அந்த உல்லாசியின் திகைப்பை, அவன் உற்றுக் கவனித்தான். திகைத்தது அவனுக்குத் தெரிந்துவிட்டது. அடுத்து அதைக்குறித்துக் கேள்விகள் தொடுப்பான் என்றெண்ணியதும் அவள் மனம் திடுக்கிட்டது. அந்த வேடதாரியின் கழுகுப் பார்வையின் தீட்சண்யத்தைத் தாள முடியாமல் வேதனையோடு தலை குனிந்துகொண்டாள்! மனத்திலே ஒரு மின்னலோட்டம்! அவள் கன்னங்களிலே தாரை தாரையாகக் கண்ணீர் ஓடியது!

[வளரும்]

சின்ன காஞ்சீபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.